**2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர் மன்றக் கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**

**முன்னிலை : திருமதி. ஆர்.ஜானகி.**

**பொருள் எண்.1**

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் அவர்களது ஆகஸ்ட் & செப்டம்பர் - 2025 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.986/2023/சி1)

**பொருள் எண்.2**

மாவட்ட பேரிடர் மேலாண்மை மற்றும் வடகிழக்கு பருவமழை முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றிய ஆய்வுக்கூட்டம் நாள்.23/09/2025 அன்று தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறு பாலங்கள் ஆகியவற்றில் அவ்வப்போது எற்படும் அடைப்புகள் மற்றும் மண்துகல்கள் JCB இயந்திரம் மூலம் உடனுக்கு உடன் தூர்வாரும் பணிகளை செய்திட வேண்டி அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.2,00,000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலககுறிப்பு :-

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரபிரிவின்அவசரஅவசியம்கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் மேல்நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2990/2025/எச்1)

**பொருள் எண்.3**

நகராட்சி விதிகள் எண் 57(7) ன் கீழ் சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது மேற்படி நகரின் அனைத்து வார்டுகளில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினமும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்து மறுசுழற்சி செய்திடவும் மறுசுழற்சி செய்திட இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பபட்டு வருகிறது மேற்கண்ட பணிகளை Mcc சென்டர் மூலம் அரைத்து உரமாக்க பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் உதிரி பாகங்கள் அவ்வப்போது பழுது அடைவதால் அதனை உடனுக்கு உடன் சரி செய்திடவும் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்ட்டிக் கழிவுகளை பேல் செய்யப்பட்டு வருகிறது இவ்வாறு

பேல் செய்வதற்கு பேலிங் பெல்ட்கள் அதிகம் தேவைப்படுகிறது அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.2,25,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலககுறிப்பு :-

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரபிரிவின்அவசரஅவசியம்கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் மேல்நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2989/2025/எச்1)

**பொருள் எண்.4**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரின் அனைத்து வார்டுகளில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தினமும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்து மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் பேப்பர் கழிவுகளை டால்மியா மற்றும் அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பபட்டு வருகிறது இதன் தொடர்ச்சியாக மேற்படி சிமெண்ட் ஆலைகளுக்கு பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு செல்ல தனியார் நிறுவனம் மூலம் லாரிகளை வாடகை அடிப்படையில் அமர்த்திக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.4,95,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலககுறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசரஅவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் மேல்நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2989/2025/எச்1)

**பொருள் எண்.5**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரம் டெங்கு நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின் படியும், நகராட்சி பகுதியில் இயங்கி வரும் அனைத்து பள்ளி மாணவ மாணவியருக்கும் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை தொடச்சியாக ஐந்து நாட்கள் வழங்குவதற்கு நிலவேம்பு கசாயம் வாங்கிடவும் மற்றும் நகராட்சிப்பகுதிகளில் பொதுமக்களுக்கும் மற்றும் பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்களான தினசரி சந்தை , பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் வழங்கிட ஏதுவாக 100 கிலோ நிலவேம்பு பொடியை தமிழ்நாடு அரசு நிறுவனமான டாம்ப்கால் நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.50.000/- த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2989/2025/எச்1)

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் மழை காலங்களில் தண்ணீர் தேங்கி நின்று கொசுப் புழுக்கள் அதிகம் உற்பத்தியாகி கொசுக்களினால் பரவும் தொற்று நோய்களிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் விதமாக DBC (டெங்கு கொசுப்புழு ஒழிப்பு) பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்திக் கொள்வதற்கு மொத்தம் 30 பணியாளர்களுக்கு 01.10.2025 முதல் 31.03.2026 வரைமொத்த ஆறு மாதத்திற்கு ஊதியமாக வழங்கிட தொகை ரூ,32 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.998 நாள்30.07.2025 அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு16.09.2025அன்று (E TEDNER) கோரப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு

| வ,எண் | ஒப்பந்த்தாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Vino construction, Bhavanisagar-638451 | 589/-per Day |
| 2. | P.Gopalkrishnan,1/272, c pidariur, chennimalai-1 | 595/- per Day |

மேற்கண்டவாறு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Vino construction, Bhavanisagar என்ற நிறுவனம் கொடுத்துள்ளதை ஒப்புக்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1350/2023/எச்1)

**பொருள் எண்.7**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரை பின்பற்றி எதிர்வரும் வடக்கிழக்கு பருவமழை முன் எச்சரிக்கை நடவடிக்கை காரணமாக சத்தியமங்கலம் நகராட்சி பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி விதிகளின் எண் 235-ன் படி தேவையான கிருமி நாசினி பொருட்களை உடனுக்குடனே கீழ் காணும் பட்டியல் படி வழங்கிட மாவட்ட கூட்டுறவு பண்டகசாலை லிமிடட் என்ற நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.7,95,000-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ,எண் | பொருட்கள்விவரம் | எண்ணிக்கை கிலோ / லிட்டர் |
|---|---|---|
| 1. | ப்ளீச்சிங் பவுடர் | 6000 |
| 2. | Toilet Acid | 600 |
| 3. | சுண்ணாம்புத்தூள் | 6000 |
| 4. | லைசால் | 300 |
| 5. | பினாயில் | 300 |
| 6, | லெமன்கிராஸ்ஆயில் | 100 |

அலுவலககுறிப்பு :- மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.2988/2025/எச்1)

**பொருள் எண்.8**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு தூய்மை பணியாளர்களுக்கு நகராட்சி விதிகளின் எண் 235-ன் படி தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் உடனுக்கு உடனே கீழ் காணும் விவரப்படி வழங்கிட அதற்கான நேரடி கொள்முதல் அரசால் அங்கீகாரம்பெறப்பட்ட நிறுவனம் தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடட் என்ற நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.4,95,000-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ,எண் | பாதுகாப்பு உபகரண பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கையுரை (plastic glows) | 53 |
| 2 | கையுரை (lather glows) | 53 |
| 3 | தலைகவசம் (Hement) | 53 |
| 4 | கம்பூட் (சூ) | 53 |
| 5 | மழைக்கோட் (Rani coat) | 53 |
| 6 | முககவசம் (Mouth mask) | 53 |
| 7 | ஒளிரும்உடை (ReffeefotJocket) | 53 |
| 8 | முழு முக கவசம் | 3 |

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் பின்னேற்பு பெற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2987/2025/எப்1)

**பொருள் எண்.9**

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட கோட்டுவீராம்பாளையம் கிராமம், பழைய க.ச.எண்.58/1 பாகம், 57B புதிய க.ச.எண்.58/1 பாகம், 59/3B யில் டவுன் சர்வே வார்டு எண் A, பிளாக் எண்-5, நகரளவு எண் 14/1, அவ்விடத்தில் 64 ½ சென்ட் இடத்தில் பள்ளி கட்டிடம் கட்ட திருமதி.B.இந்திராபிரியதர்ஷினி க/பெ.S.பிரவீண்குமார் என்பவர் மாவட்ட நகர ஊரமைப்பு இணை இயக்குநர் ஈரோடு அவர்களுக்கு இணையதளத்தின் வழியாக விண்ணப்பம் செய்துள்ளார். இணையதள கோப்பு எண் SWP/BPA/569591/2025/TCP நாள்:11.07.2025, (Approaching Road) இணைப்பு சாலை இல்லாததால் இணையதள மனு திருப்பி

அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே மனுதாரர் திருமதி.B.இந்திராபிரியதர்ஷினி க/பெ.S.பிரவீண்குமார் என்பவர் இணைப்பு சாலையினை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்து 14.07.2025ம் தேதி மனு கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட இணைப்பு சாலையினை உரிய அபிவிருத்தி பணிகள் நகராட்சி பொறியாளரின் அறிவுரையின்படி செய்து முடித்து ஒப்படைப்பு செய்ய 12.08.2025ம் தேதி மனுதாரருக்கு கடிதம் கொடுக்கப்பட்டது. மேலும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12843/2022/டிபி2 , நாள்:20.10.2022ல் தெரிவித்துள்ளவாறு அமைந்திருக்க வேண்டும் என மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி மனுதாரரின் அணுகு பாதையில் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளதாகவும், 20 வாட்ஸ் LED மின் விளக்குகள் இரண்டு எண்ணிக்கை நகராட்சியின் மூலம் அமைக்க ரூ.50,000/- மதிப்பீடும், 150மிமீ பி.வி.சி குழாய்கள் பதித்து மூன்று இடங்களில் Machine hole அமைத்து கடைசியாக பாதாள சாக்கடை இணைப்பு பண்ணாரி சாலையில் இணைக்கும் பொழுது மனுதாரர் நெடுஞ்சாலை துறையின் மூலம் அனுமதி பெற்று தர வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும், பி.வி.சி பாதாள சாக்கடை குழாய் மற்றும் மூன்று Machine hole க்கு சேர்த்து ரூ.1,80,000/- மதிப்பீடு நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்ட இரண்டு மதிப்பீடுகளும் சேர்ந்த தொகை ரூ..2,30,000/- நகராட்சி கருவூலகத்தில் கட்டி அதன் இரசீது எண். 061/01/01/25-26/0009840 நாள்:09.09.2025ல் கட்டியுள்ளதாக உதவி பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் குறிப்பு நாள்:03.09.2025 தெரிவித்துள்ளார். மூன்றாம் நபர் அறிக்கை தனியார் பண்ணாரியம்மன் பொறியியல் கல்லூரி ஆய்வு செய்து ஆய்வு அறிக்கை கடிதம் எண் Test report no: BIT/Dept/Material testing 2025/ONK/04 நாள்:20.09.2025 ஆய்வு அறிக்கையினை கொடுத்துள்ளார். மனுதாரரின் மேற்கண்ட அணுகு சாலையினை (Approaching road) தானசாசனத்தின் மூலம் பெற்றுகொண்டு அச்சாலையினை நகராட்சி பராமரிப்பின் மூலம் பராமரிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2096/2025/எப்1)

**பொருள் எண்.10**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்-01 மற்றும் கச்சேரிவீதி சத்திரக்கடை எண் 01, 02 ,18 ஆகியவற்றின் உரிமக் காலம் முறையே 31.8.2025 -ஆம் தேதி உடன் முடிவடைவதால், மேற்கண்ட பழைய ஏலதாரர்கள் மீண்டும் அரசாணை எண்.92 மற்றும் 66-இன்படி நீட்டித்துக் கொள்ள சம்மத கடிதம் வழங்கியுள்ளார்கள். எனவே அரசாணை எண்.92 மற்றும் 66-இன்படி நீட்டித்துக் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

அரசாணை எண்.92 (ம) 66-இன்படி மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கண்ட கடைகளுக்கு 01.09.2025 முதல் 31.08.2028 வரையிலான காலத்திற்கு உரிமம் நீட்டித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

[கட்டு எண். 1200/2020/அ3]

**பொருள் எண்.11**

நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை கடை எண்-1 முதல் 25 வரை உள்ள கடைகளின் மேற்கூரை இரும்பு கம்பிகள் துருபிடித்து சீலீங் பூச்சு வலுவிழந்து இடியும் நிலையில் உள்ளதால் கடைகளை காலி செய்து கடை உரிம வாடகையினை இரத்து செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்-924 நாள்:28.03.2025 இல் அனுமதிக்கப்பட்டது. அதன்படி கடைகளை காலி செய்ய அறிவிப்பு வழங்கப்பட நிலையில் புதிய கடைகள் கட்டுவதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பிய நிலையில் அதன் அனுமதி பெறும் வரையில் கடையினை நடத்தி வரும் காலத்திற்கு வாடகை வசூலிக்க தொடர் நடவடிக்கையில் உள்ளது. இந்நிலையில் வார சந்தை கடை எண்-5 திரு.கௌதம் (late) தா/பெ.அபிராமி என்பவர் 4/2025 முதல் வாடகை செலுத்தாமல் 8/2025 இல் கடையினை தானாகவே காலி செய்து சென்று விட்டார். மேற்கண்ட கடை காலியாக உள்ளதால் நிலுவை வாடகையினை உரிமதாரரின் முன் வைப்புத் தொகையில் சரிகட்டிக் கொள்ளவும், மேற்கண்ட நகர்மன்ற தீர்மானத்தின்படி வாடகையினை ரத்து செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

இந்நகர்மன்ற தீர்மானம் எண்-924 நாள்:28.03.2025 இன்படி கடை இடிக்கும் நிலையில் உள்ளதால் கட்டுமான பணிக்கான அனுமதி பெறும் வரையில் கடை நடத்தி வரப்பட்ட காலத்திற்கு வாடகை வசூலிக்க அனுமதிக்கப்பட்ட நிலையில் வாரசந்தை கடை எண்-5 உரிமதாரர் 8/25 இல் தானாகவே காலி செய்து சென்றுவிட்டதால் வாடகையினை கேட்பிலிருந்து இரத்து செய்திடவும், நிலுவை வாடகையினை முன் வைப்புத் தொகையில் சரிகாட்டிக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

[கட்டு எண். 1200/2020/அ3]

**பொருள் எண்.12**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை கடை எண்.34 க்கு திரு.N.ரவிசங்கர் என்பவர் கடை வாடகை 4/2025 முதல் 10/2025 வரை 7 மாதங்களுக்கான வாடகை செலுத்தக்கோரி அறிவிப்பும், நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் அறிவுறுத்தப்பட்டும், வாடகை செலுத்தப்படாமல் காலம் கடத்தி வரப்படுவதால் பொது ஏல நிபந்தனைகளின்படி கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டது. எனவே மேற்கண்ட கடையினை அரசாணை எண் 92 மற்றும் 66 இன்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை கடை எண்-34, 4/2025 முதல் 10/2025 வரையிலான வாடகையினை செலுத்தாமல் காலம் கடத்தி வருவதால் மேற்கண்ட கடை பூட்டப்பட்டது. பொது ஏல நிபந்தனைகள்படி உரிமம் ரத்து செய்து நிலுவை வாடகையினை உரிமைதாரரின் முன் வைப்புத் தொகையில் சரிகாட்டிக் கொள்ளவும் ஏல நிபந்தனைகளின்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1200/2020/அ3)

**பொருள் எண்.13**

சத்தியமங்கலம் நகராட்சியில் பணிபுரிந்து வயது முதிர்வு/ சுய விருப்ப ஓய்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற இந்நகராட்சி பணியாளர்களுக்கு சிறப்பு சேமநல நிதி திட்டத்தின் கீழ் செலுத்திய சந்தா தொகை அதற்கான வட்டித்தொகை மற்றும் நகராட்சி நிர்வாகப் பங்குத் தொகை ஆகியவற்றை கீழ்க்கண்ட விபரப்படி அனுமதித்து வழங்கப்பட வேண்டியுள்ளது.

| வ.எண் | பெயர் | பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணி ஓய்வு பெற்ற நாள் | சந்தா தொகை | வட்டித் தொகை | நகராட்சி நிர்வாக பங்கு தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மகாலட்சுமி | கணினி திட்டப்பணியாளர் | 01.12.2009 | 31.03.2023 | 11,130 | 8,752 | 10,000 | 29,882 |
| 2 | கே.கதிர்வேல் | பொறியாளர் | 03.02.1989 | 31.10.2024 | 2,960 | 27,960 | 10,000 | 40,920 |
| 3 | அ.பண்ணாரி | தூய்மை பணியாளர் | 10.07.1998 | 31.10.2024 | 2,960 | 11,612 | 10,000 | 24,572 |
| 4 | கே.சக்திவேல் | சுகாதார அலுவலர் | 17.05.1984 | 30.11.2024 | 2,960 | 49,901 | 10,000 | 62,861 |
| 5 | தங்கம்மாள் | தூய்மை பணியாளர் | 01.09.2014 | 30.06.2025 | 9,030 | 4,847 | 10,000 | 23,877 |
| 6 | கே.சுப்புலட்சுமி | தூய்மை பணியாளர் | 07.12.1997 | 30.06.2025 | 2,960 | 11,673 | 10,000 | 24,633 |
| 7 | பி.லட்சுமி | தூய்மை பணியாளர் | 03.07.1986 | 30.06.2025 | 2,960 | 40,116 | 10,000 | 53,076 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | கே.சுப்பிரமணி | தூய்மை பணியாளர் | 01.09.2014 | 30.06.2025 | 9,030 | 4,847 | 10,000 | 23,877 |
| 9 | எம்.கோபியம்மாள் | தூய்மை பணியாளர் | 01.09.2014 | 30.06.2025 | 9,030 | 4,847 | 10,000 | 23,877 |
| 10 | பாபு | குழாய் ஆய்வாளர் | 12.01.2000 | 31.03.2024 | 2,960 | 9463 | 10,000 | 22,423 |
| | | | | மொத்தம் | **55,980** | **1,74,018** | **1,00,000** | **3,29,998** |

மேற்காணும் பட்டியலின் படி வ.எண்.1 முதல் 10 வரை உள்ள பணியாளர்களுக்கு சிறப்பு சேமநல நிதி திட்டத்தின் கீழ் தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1280/2024/எ2 )

**பொருள் எண்.14**

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுதுப் பொருட்கள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றினை 2025-2026 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.5,00,000/- இலட்சத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1033/2024/எ2 )

**பொருள் எண்.15**

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் மற்றும் பேப்பர்கள் ஆகியவற்றினை 2025-2026 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.5,00,000/- லட்சத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலககுறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1033/2024/எ2 )

**பொருள் எண்.16**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.5,7,15,24 இல் எற்கனவே ஆழ்துளை கிணறு போடப்பட்டு, சின்டெக்ஸ் டேங்க் அமைந்த இடங்களில் பைப்லைன் நீட்டிப்பு செய்ய வேண்டியுள்ளது. எனவே புதிய பைப்லைன் அமைத்து பைப் நீட்டிப்பு செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.4.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.17**

சத்தியமங்கலம் நகராட்சியில், அம்ரூத் 2.0, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் , 15வது நிதிக்குழு மானியம் ஆகிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. இத்திட்டப்பணிகள் குறித்து நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் , சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , திருப்பூர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு, அவர்களால் காணொலி மூலம் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. எனவே முக்கிய காணொலி ஆய்வு கூட்டங்கள் மேற்கொள்ள ஆணையாளர் இருக்கைக்கு புதிய கணினி, ஸ்பீக்கர் மற்றும் கேமரா தேவைப்படுகிறது. எனவே இதற்காகும் தோராய செலவினம் ரூ.1.25 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.18**

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலக கட்டிடத்தின் பின்புறம் உள்ள வருவாய் பிரிவு கட்டிடத்தில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் , அக்கட்டிடத்தில் மேற்கூரை(Slab) சேதமடைந்து தண்ணீர் கட்டிடத்தின் உட்புறம் சென்று சுவர்களில் Seepage ஏற்பட்டு மிகவும் மோசமாக உள்ளது. எனவே பின்புறம் உள்ள கட்டிடத்தில் மேல் முழுவதும் Weathering course செய்யவும் மற்றும் அக்கட்டிடத்திற்கு முழுவதும் வர்ணம் பூசுதல் மற்றும் சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.6.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.19**

சத்தியமங்கலம் நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் லாரி எண்.TN36AZ8821 வாகனத்தினை ஆண்டு பராமரிப்பு செய்து போக்குவரத்துத் துறையிடமிருந்து தகுதிச்சான்று பெறவும், வாகன பழுது நீக்கம் மற்றும் வாகன பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் மேற்கண்ட வாகனம் தகுதிச்சான்று பெறும் வரை அதற்கு மாற்றாக, குடிநீர் விநியோகம் இல்லாத இடங்களுக்கு தினசரி தனியார் லாரி மூலம் குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்குள் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3062/2025/இ1)

**பொருள் எண்.20**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட மைசூர் டிரங்க் சாலையில் நகர காவல் நிலையம் அருகில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டுள்ளது. அதில் HDPE தண்ணீர் தொட்டி அமைத்து தண்ணீர் விநியோகம் செய்தல், ஆம்புலன்சு மூலம் வரும் நோயாளிகள் இறங்க வசதியாக நுழைவு வாயிலில் நிழற்கூரை அமைக்கவும், UPVC ஜன்னல் மற்றும் வென்டிலேட்டர்கள் அமைக்கவும், முன்புற கேட் அமைக்கவும், படிக்கட்டு அறைக்கு மேற்கூரை அமைத்து இரும்பு கிரில் கைப்பிடி அமைத்தல், பாதாள சாக்கடை வசதி உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்த கூடுதல் செலவினம் ரூ.5.00 இலட்சம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதி 2025-26ல் இருந்து மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.21**

TUFIDCO நிதி நிறுவன மேலாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண்.TUFIDCO/AMRUT2.0/AM(M)/2021/SNA-SPARSH, நாள்:07.08.25 இன் படி சத்தியமங்கலம் நகராட்சியின் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஜல் ஹி அம்ரித் (Jal Hi Amrit) திட்டத்தின் கீழ் பயன்படுத்திய தண்ணீரை, மறுசுழற்சி செய்வதற்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, நமது சத்தியமங்கலம் நகராட்சியின் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், 3 ஸ்டார் குறியீட்டில் உள்ளதை, 4 ஸ்டார் குறியீட்டை எய்த வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் லிமிடெட், சென்னை அவர்களின் கடிதம் எண்:786/TWIC/2025-26/JHA-ULBs/Proposal, நாள்: 04.09.25 இன் வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டவாறு, சத்தியமங்கலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 4 ஸ்டார் குறியீட்டை அடைய, தொழில் நுட்ப கலந்தாலோசகர் பணியை தங்களுக்கு வழங்குமாறு, தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் லிமிடெட், சென்னை அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான சேவை கட்டணமாக ரூ.3,42,400/- செலுத்த கோரியுள்ளார்கள்.

மேலும், 4 ஸ்டார் குறியீட்டை அடைந்ததும் அதற்கான மானியத் தொகை மேலும் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் அரசு நிறுவனத்திற்கு தொழில் நுட்ப கலந்தாலோசகர் பணியை வழங்கலாம், மேலும், மேற்கண்ட கலந்தாலோசகர் பணிக்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொள்வதற்கான கால அவகாசம் 31.10.25 அன்றுடன் முடிவடைவதால், உடன் பணி உத்தரவு வழங்கியதை மேற்கண்ட சேவைக்கான கட்டணம் ரூ.4,04,032/-ஐ (சேவை மற்றும் சரக்கு வரி 18% உட்பட) நகராட்சியின் வருவாய் நிதி 2025-26 ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலககுறிப்பு :-

1. மேற்படி பணி உத்தரவு வழங்க கால அவகாசம் முடிவடைவதால், பணி உத்தரவு வழங்கியதை மன்றம் பதிவு செய்யலாம்.

2. மேற்படி சேவைக்கான கட்டணம் ரூ.4,04,032/- ஐ நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3120/2025/இ1)

**பொருள் எண்.22**

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு மாவட்டம் அவர்களின் கடிதம் நக எண்:4262/2024/அ3, நாள்:09.10.25 இல் தெரிவிக்கப்பட்டவாறு சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் திடல் (வார்டுஎண்.19) கோட்டுவீராம்பாளையம் அங்கன்வாடி மையம் கட்டுதல் பணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2024-25ன் கீழ் பணி மேற்கொள்ள மக்களவை உறுப்பினர், நீலகிரி அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு, திருத்திய நிதியிசைவு வரப் பெற்றுள்ளது. எனவே, அதற்கான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடத்தில் உள்ள பழைய அங்கன்வாடி மையத்தை ஒருங்கிணைந்து குழந்தைகள் வளர்ச்சித் துறையின் அனுமதி பெற்று இடித்து அகற்றி விட்டு அதே இடத்தில் புதிய அங்கன்வாடி மையம் கட்டவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதி 2025-26ல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.23**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் உள்ள ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புப்பள்ளம் ஆகிய இரண்டு தலைமை நீரேற்று நிலையங்களில் குளோரிநேசன் பிளாண்ட் மூலம் ஆற்று நீரினை சுத்தம் செய்யப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இந்த பிளாண்ட் அமைக்கப்பட்டு பல வருடங்களுக்கு மேலாகிவிட்டதால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, ஒரு வருடத்திற்கு ஆண்டு பராமரிப்பு மற்றும் அனைத்து பழுது பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.707 , நாள்.27.06.2024 இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திருவாளர்.I Tech systems, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தீர்மான எண்.767, நாள்.31.07.2025 இல் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கனவே இப்பணிகளை மேற்கொண்டு வருகிற திருவாளர். I Tech Systems ஒப்பந்ததாரர் அவர்களை ஒரு வருட

காலத்திற்கு அதே விலை விகிதத்தில் குளோரின் பிளாண்ட் பராமரிப்பு பணிகளை நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.24**

இந்நகராட்சியில் வார்டு எண்.27 ரங்கசமுத்திரத்தில் புதிதாக அங்கன்வாடி கட்டிடம் கட்ட ரூ.16.50 கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் பள்ளி மேம்பாட்டு மானியம் (SFC-School Improvement Grant - Capital works) 2025-26 திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 17.10.2025 இன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 ரங்கசமுத்திரத்தில் புதிதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | ரூ.16,50,000/- | திருவாளர்.வினோ கன்ஸ்டரக்சன் பவானிசாகர். | 0.06 சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. C.P.கோபாலகிருஷ்ணன் சென்னிமலை | 3.08 சதவீதம் மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்படி பணி திட்டப்பணி ஆகையால் பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.25**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் **“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின்** கீழ் பொது மக்கள் கோரிக்கைகள் அவர்களின் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய சிறப்பு முகாம்கள் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பகுதியில் 17.07.2025 ஆம் தேதி முதல் மொத்தம் 11 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது,

கீழ்கண்டவாறு முகாம்கள் நடைபெற்றதையும் நடைபெற உள்ளதையும் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | முகாம் நடைபெறும் இடம் | வார்டுகள் | முகாம் நடைபெறும் தேதி | நேரம் காலை முதல் மாலை வரை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகம் சத்தியமங்கலம். | 23,24 | 18.09.2025 | 9.00 முதல் 3.00 மணி |
| 2 | மீனாட்சி திருமண மண்டபம், பரிசல்துறை வீதி | 25,26 | 08.10.2025 | 9.00 முதல் 3.00 மணி |
| 3 | நகராட்சி அலுவலகம் சத்தியமங்கலம். | 27 | 29.10.2025 | 9.00 முதல் 3.00 மணி |

அலுவலககுறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம் [ந.க.எண். 2432/2023/சி1]

**பொருள் எண்.26**

சத்தியமங்கலம் நகராட்சியில் வார்டு எண்.5 இந்திரா நகர் பிள்ளையார் கோவில் தெரு, பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதால், அவ்விடத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து, Syntex Tank பொருத்தி பைப்லைன் நீட்டிப்பு செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.4.20 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2025-26 இல் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.3119/2025/இ1)

**பொருள் எண்.27**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் பின்புறம் உள்ள வணிக வளாகத்தில் உள்ள கடைகளில் மேற்கூரையில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி கடைக்குள் புகுந்து வியாபாராம் செய்ய முடியாமல் பாதிக்கப்படுகிறது என குத்தகைதாரர்கள் தெரிவித்தற்கிணங்க, மேற்கூரை முழுவதும் எடுத்துவிட்டு Weathering Corse அமைத்து மழைநீர் கடைக்குள் புகாத வண்ணம் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் அவ்வளாகத்தில் சுற்றியுள்ள இடத்தில் சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.6.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.992/2024/இ1)

**பொருள் எண்.28**

இந்திய ராணுவம் ஆட்சேர்ப்பதற்காக ஈரோடு மாவட்டத்திற்கு அக்னி வீர இராணுவ ஆட்சேர்ப்பு பேரணி நடத்த மாவட்ட ஆட்சியர் ஈரோடு, அவர்களால் ந.க.எண்.4604/2025/கே2, நாள்.04.08.2025 இல் ஈரோடு மாநகராட்சி மற்றும் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளுக்கு பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 4 நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை ஈரோடு மாநகராட்சியிலிருந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநகராட்சியிலிருந்து மொத்தமாக பணி மேற்கொண்டதில் சத்தியமங்கலம் நகராட்சிக்கு ரூ.4.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதை ஈரோடு மாநகராட்சிக்கு காசோலையை உடன் வழங்க 08.10.2025 மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு அவர்களின் ஆய்வுக்கூட்ட நாள்.08.10.2025இல் உடனே செலுத்த அறிவுறுத்தப்பட்டதால் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.4.00 இலட்சத்தை Erode City Corporation அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.2432/2025/இ1)

**பொருள் எண்.29**

சத்தியமங்கலம் நகராட்சி வார்டு எண்.9, கட்டபொம்மன் நகர் பகுதியில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலைத்தொட்டிக்கு மேலே செல்லும் படிகட்டுகள் இடிந்து மிகவும் மோசமாக உள்ளது. மேல்நிலைத்தொட்டிக்கு சுத்தம் செய்ய பணியாளர்கள் மேலே செல்ல முடியாமல் சிரமமாக உள்ளது. எனவே புதிய படிகட்டுகளை அமைக்க தோராய செலவினம் ரூ.3.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3119/2025/இ1)

**பொருள் எண்.30**

அரசாணை (நிலை) எண்.10 நாள்.23.1.2023 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப,1) துறை இல் இந்நகராட்சி பொறியியல் பிரிவில் அடிப்படை பணியாளர்களுக்கான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

| வ.எண். | பணியிடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 |
| 2 | பணி ஆய்வாளர் | 3 |
| 3 | படவரைவாளர் நிலை III | 1 |
| 4 | மின் பணியாளர் நிலை 1 | 1 |
| 5 | குழாய் பொருத்துனர் நிலை 1 | 1 |

மேற்கண்ட பணியிடங்கள் மட்டுமே அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது இந்நகராட்சியில் இரண்டு தலைமை நீரேற்று நிலையங்கள், மூன்று மேல்நிலைத்தொட்டிகள், மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமையபெற்றுள்ளது. மேற்கண்ட அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளவும் தினசரி குடிநீர் விநியோகம் செய்ய மின் மோட்டார்கள் இயக்க, குழாய் திறப்பாளர், குடிநீர் கட்டணம் வசூல் செய்ய நான்கு காலாண்டுகள் கேட்பு எழுப்ப கணிணி இயக்குநர், ஆகிய பணியாளர்கள் தேவைப்படுகிறது.

எனவே மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டு தொகை. ரூ.13.16 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர்.Vino Constructions ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்ற தீர்மான எண்.881 நாள்.07.02.2025 இன் படி ஏற்றுக்கொள்ளப்பட்டு பொறியியல் பிரிவிற்கு தேவையன பணியாளர்களை பணிக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தற்போது இப்பணிக்கான ஒப்பந்தகாலம் முடிவடைந்ததால் ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டு வரும் திருவாளர்.Vino Constructions ஒப்பந்தததாரர் அவர்கள் (01.09.2025 முதல் 28.02.2025) 6 மாத காலத்திற்கு அதே விலை விகிதத்தில் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.992/2024/இ1)

**பொருள் எண்.31**

நகராட்சி நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.2452/2023/பி1, நாள்.13.06.2025 இல்தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்)-2.0 திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் உள்ள 24x7 Call Center அமைக்கப்பட்டு தேவையான பணியாட்கள் வெளிக்கொணர்வு முகமை அடிப்படையில் நியமனம் செய்தது, இதற்காகும் ஆண்டு ஊதியம் மற்றும் பராமரிப்பு தொகை வழங்க வேண்டி நகராட்சிகள் வாரியாக தொகை நிர்ணயம் செய்யப்பட்டு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தரவில் இந்நகராட்சிக்கு ரூ.33,071 நிர்ணயம் செய்து பொது நிதியிலிருந்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை. ரூ.33,071/- ஐ MENTOR INFOCOMM வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.3031/2025/இ1)

**பொருள் எண்.32**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக தார்சாலை அமைக்கும் இடங்களில் பாதாள சாக்கடையின் Machine Hole சாலையின் தரைமட்டத்திற்கு கீழ் ஒள்ளதால் வாகனங்கள் அதில் செல்லும் போது விபத்து ஏற்படுகிறது. எனவே Machine Hole ஐ சாலை மட்டத்திற்கு மேல் உயர்த்த ஆகும் தோராய செலவிளம் ரூ.4.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதி 2025-26 இல் இருந்து மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.31120/2025/இ1)

**பொருள் எண்.33**

சத்தியமங்கலம் நகராட்சியில் 2025-2026 நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு 09.10.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்பிக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| | **குடிநீர் நிதி திட்டம் 2025 - 2026** | | | |
| 1 | சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட மீனாட்சியம்மன் கோவில் வீதி , அண்ணா நகர் பகுதியில் ஜி,ஐ பைப்புகளுக்கு பதிலாக பி,வி,சி அமைத்தல் . | ரூ.1,30,000/- | திருவாளர்.வினோ கன்ஸ்டரக்சன் | 0.01 சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.ஆறுமுகம் | 2,43 சதவீதம் மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 21 அரிமா மஹால் எதிர் புறம் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளுதல் , | ரூ.1,00,000/- | திருவாளர்.வினோ கன்ஸ்டரக்சன் | 0.01% சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.ஆறுமுகம் | 4.82 சதவீதம் மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மோட்டார், ஸ்டார்ட்டர்கள் மற்றும் மோட்டார் உபகரணங்கள் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் . | ரூ.9,90,000/- | திருவாளர்.வினோ கன்ஸ்டரக்சன் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | திரு.ஆறுமுகம் | 1.24 சதவீதம் மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4 | சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 11 காசிக்காடு பகுதியில் மேல்நிலை தொட்டிக்கு இரும்பு ஏணி அமைத்தல் . | ரூ.5,00,000/- | திருவாளர்.வினோ கன்ஸ்டரக்சன் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| | | | திரு. ஆறுமுகம் | 1.57 சதவீதம் மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள குடிநீர் குழாய் பராமரித்தல் பணி,. மேற்கொள்ளுதல். | ரூ.9,00,000/- | திருவாளர்.வினோ கன்ஸ்டரக்சன் | 0.04 சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. ஆறுமுகம் | 0.08 சதவீதம் மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | **பொது நிதி திட்டம் 2025 - 2026** | | | |
| 6 | சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 கோம்புப்பள்ளம் பகுதியில் 5 மின்விளக்குகள் அமைத்தல். | ரூ. 90,000/- | திருவாளர். ஹைட்ரோ மெக் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் | 0.68 சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.அமுதா &கோ ஒப்பந்ததாரர் | 3.67 சதவீதம் மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 7 | சத்தியமங்கலம் பேருந்து நிலையத்தில் சிறுநீர் கழிப்பிடம் அருகில் உள்ள சாக்கடையை பராமரித்தல் மேற்கொள்ளுதல். | ரூ.2,00,000/- | திரு. ஆறுமுகம் | 0.01 சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.வினோ கன்ஸ்டரக்சன் | 1.35 சதவீதம் மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 8 | சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பெரியகுளம் ரோடு லிட்டில் பிளவர் பள்ளி (சுடுகாடு ) முதல் நகராட்சி பள்ளி வடக்கு வீதி KGR மருத்துவமனை கார்னர் வரை (பையனாகுட்டை ஓடை) வடிகாலில் துர்வாரும் பணி மேற்கொள்ளுதல். | ரூ. 3,10,000/- | திருவாளர்.வினோ கன்ஸ்டரக்சன் | 0.01 சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. ஆறுமுகம் | 2.78% சதவீதம் மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 'சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் வார்டு எண்.27 வரை உள்ள பகுதிகளில் 25 சிறு பாலம் கட்டுதல் பணி . | ரூ.15,00,000/- | திரு. ஆறுமுகம் | 0.01% சதவீதம் மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.வினோ கன்ஸ்டரக்சன் | 1.59 சதவீதம் மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்கண்ட பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணியின் அவசரம் கருதி பணி உத்தரவு வழங்கியதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.34**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட 27 வார்டுகளில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உருவாகும் மக்கும் கழிவுகள் சேகரித்து அரைத்து உரமாக்கப்பட்டு விவசயத்திற்கு உரமாக வழங்கப்பட்டு வருகிறது EM Solution இயக்கை முறையில் Mcc உரக்கிடங்குகளில் மக்கும் கழிவுகளை அரைத்து உரமாக்க தேவையான பொருட்கள் தயிர் மற்றும் வெள்ளம் ஆகிய பொருட்களை பெற்றுக்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.50,000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் ( ந.க.எண்.2991/2025/இ1)

**பொருள் எண்.35**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நக எண்:18464/2023/DO1, நாள்:7.10.25 இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, நகராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வரும் தார்/சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் யாவையும் இயற்கை இடர்பாடுகள், போக்குவரத்து நெரிசல் காரணமாகவும், பாதாள சாக்கடை திட்டம், குடிநீர் மேம்பாட்டு திட்டம் ஆகியவை மேற்கொள்ளும் போதும் வாகனப் போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லாமல் உள்ளது.. இவைகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டியது அவசியமாகிறது. அதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்டுள்ளார். சத்தியமங்கலம் நகராட்சி முதல் நிலை நகராட்சி என்பதால், அனைத்து வார்டுகளிலும் நடப்பு வருடத்திற்கு ரூ.10.00 இலட்சத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தெரிவித்துள்ளார். எனவே, மேற்கண்ட தார் சாலை மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலை பேட்ச் மற்றும் சீரமைப்பு செய்ய நடப்பு வருடத்திற்கான செலவினம் ரூ.10.00இலட்சத்திற்குள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3118/2025/இ1)

**பொருள் எண்.36**

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலக கட்டிடம் 2014 ஆம் ஆண்டு கட்டி திறக்கப்பட்டு தற்போது வரை சுமார் 10 வருடங்கள் மேல் ஆனதால் கட்டிடங்கள் முழுவதும் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது அலுவலகத்தை சுற்றியுள்ள கட்டிடம் முழுவதற்கும் வர்ணம் பூசுதல் மற்றும் சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.13.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.37**

சத்தியமங்கலம் நகராட்சி வார்டு எண்.11 இல் தினசரி சந்தை வளாகத்தில் மழைநீர் வடியும் தோணி வளைந்து விட்டதால், மழைநீர் இடையிடையே கீழே கசிவு ஏற்பட்டு பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதனை தடுக்க மழைநீர் தோணியிடையே MS ஆங்கிள் கொண்டு வெல்டிங் செய்யவும், தரைமட்டத்தில் 6”pvc பைப் கொண்டு மழைநீரை ஒருங்கிணைக்கவும் மார்க்கெட் கடை ஆரம்பம் மற்றும் முடிவில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தவும் , 6” pvc பைப் சுற்றிலும் சிமெண்ட் கான்கீரிட் கொண்டு பாதுகாப்பு செய்யவும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் செலவாகும். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி 2025-26 இல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3120/2025/இ1)

**பொருள் எண்.38**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 காசிகாடு காலனிக்கு செல்லும் வழியில் உள்ள சிறுபாலம் சமீபத்தில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் மண் அரிப்பு ஏற்பட்டு பழுதடைந்துள்ளது. அதன் பக்கச்சுவர்களும், மண் அரிப்பினால் பழுதடைந்து சரிந்துவிட்டது.

மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9, நட்சத்திரா கார்டன் அருகில் புளியங்கோம்பை செல்லும் சாலையில் உள்ள சிறுபாலம் உயரக்குறைவு காரணமாக மழை வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட புதர் செடிகள் மற்றும் முள் மரங்கள் அடைத்து வெள்ளநீர் செல்ல வழியில்லாமல் சிறுபாலத்தின் மீது சென்றது. இதனால் மேற்கண்ட சிறுபாலத்தை உயரப்படுத்தி அமைக்க வேண்டியுள்ளது.

மேற்கண்ட இரு பாலங்களையும் உயரப்படுத்தி சீரமைக்க உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதி 2025-26 இல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3120/2025/இ1)

**பொருள் எண்.39**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கோம்புபள்ளம் தலைமை நீரேற்று நிலையத்தில் ஆற்று நீர் கலங்கலாக பெறப்படும் போது அதை தெளிவடைய ஆலம் கட்டிகள் (Alum) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆலம் கட்டிகள் சுமார் 1 கிலோ எடையுடன் கூடியதாக உள்ளது. அங்கிருந்து ஆலம் கட்டிகளை கரைசலாக பயன்படுத்த மேலே முதல் தளத்தில் உள்ள இடத்தில் கொண்டு சேர்க்கப்பட வேண்டும். இதற்காக இரும்பு படிக்கட்டு ஒன்று அமைக்க வேண்டியுள்ளது. (ராவாட்டர் பம்ப் அறை) தார்சாலையிலிருந்து மிகவும் சரிவாக உள்ளதால், அதற்கு படிக்கட்டுகள் கட்ட வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதி 2025-26 இல் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3119/2025/இ1)

**பொருள் எண்.40**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.043/2025/அ2, நாள்:16.10.2025-ன்படி, சத்தியமங்கலம் நகராட்சிக்கு 2025-2026-ம் ஆண்டிற்கான வருடாந்திர பங்களிப்புத் தொகை ரூ.75,000/-ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3081/2025/சி1)

**பொருள் எண்.41**

இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.Dr.T.சீனிவாசன் அவர்களின் கடிதம் நாள் 08.10.2025-ன்படி, சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு எண்.W.P.No.23128/2018-ன்படி BSNL மற்றும் 08 நிறுவனங்கள் கண்ணாடி இழை (OFC Cable) பதிக்க தடவாடகை செலுத்தவது குறித்து வழக்கு தொடந்தது. மேற்படி வழக்கினை ஏற்று நடத்த வழக்கு கட்டணம் ரூ.30,000/- வழங்க கேட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2955/2025/இ1)

**பொருள் எண்.42**

இந்நகராட்சி வழக்கறிஞர் அவர்களின் கடித நாள்.22.10.2025 இன் படி இந்நகராட்சியில் தூய்மை பணியாளராக பணியாற்றி காலம் சென்ற திரு.பண்ணாரி(லேட்) என்பவரது வாரிசு மனைவியுமான திருமதி.ரங்கி என்பவர் தமது மகன் திரு.பழனிசாமி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் W P No 36063/2025-ன்படி வழக்கு தொடர்ந்து, 22.09.2025-ல் தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது, மேற்படி வழக்கிற்கான வழக்கு கட்டணம் ரூ.25000/- கேட்டுள்ளதை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2016/2024/இ1)

**பொருள் எண்.43**

சத்தியமங்கலம் நகராட்சியில் நடைபெற்று வரும் மற்றும் முடிவடைந்த பணிகள் 2025 ஆம் ஆண்டு வளர்ச்சி திட்டப்ணிகள் குறித்த விளம்பரம் தினத்தந்தி, தினகரன் மற்றும் தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு பட்டியல் தொகை .ரூ.62,895/-ஐ வழங்குமாறு கோரியுள்ளனர். எனவே மேற்கண்ட தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பட்டியல் தொகை விவரம் :

| வ.எண். | செய்தித்தாள் நிறுவனத்தின் பெயர் | தொகை. |
|---|---|---|
| 1 | தினத்தந்தி (The Daily Thanthi) | ரூ.26,775/- |
| 2 | தினகரன் (KAL Publications (P) Ltd) | ரூ.21,420/- |
| 3 | தினமலர் | ரூ.14,700/- |
| | **மொத்தம்** | ரூ.62,895/- |

அலுவலககுறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.44**

சத்தியமங்கலம் நகராட்சியில் கட்டபொம்மன் நகரில் இயங்கி கொண்டு வரும் காலை உணவு சமையல் அறை மையமாக கொண்டு நகராட்சி பகுதியில் உள்ள 5 நகராட்சி பள்ளிகளில் உள்ள 1 முதல் 5 வரை உள்ள பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி ஏற்கனவே நல்ல முறையில் வழங்கப்பட்டு வரும் நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 8303/2025/பஅ6,

நாள்.25.08.2025 இன் படி நகராட்சி பகுதியில் உள்ள 4 அரசு நிதி (Aided Schools) உதவி பெறும் பள்ளிகளை கூடுதலாக இணைத்து சிற்றுண்டி வழங்க தெரிவித்ததற்கிணங்க மொத்தம் 9 பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டத்தின் கீழ் காலை சிற்றுண்டி வழங்க ஏற்கனவே வாங்கி வரும் ஒப்பந்ததாரர் திருவாளர்.அன்னை கேட்டரிங், சத்தியமங்கலம் அவர்களுக்கு அடுத்த வரும் ஆண்டிற்கு 2025-2026 (01.09.2025 முதல் 31.08.2026 வரை) உணவு தயாரித்து பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் உரிமத்தை கால நீட்டிப்பு செய்து வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.1435/2024/என்1)

**பொருள் எண்.45**

சத்தியமங்கலம் நகராட்சியில் இரண்டு தலைமை நீரேற்று நிலையங்களில் உள்ள குளோரின் பிளாண்ட் மூலம் பொது மக்களுக்கு தூய்மையான குடிநீர் சப்ளை செய்ய குளோரின் கேஸ் உருளைகள் வாங்க நகர்மன்ற தீர்மான எண்.706, நாள்.27.06.2024 மூலம் அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திருவாளர்.I Tech systems ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகர்மன்ற தீர்மான எண்.767, நாள்.31.07.2025 இல் அனுமதி பெற்று குளோரின் கேஸ் உருளைகள் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கனவே இப்பணிகளை மேற்கொண்டு வருகிற திருவாளர்.I Tech Systems ஒப்பந்ததாரர் அவர்களை 01.09.2025 முதல் 31.03.2026 வரை (6 மாத காலத்திற்கு ) அதே விலை விகிதத்தில் குளோரின் கேஸ் உருளைகளை சப்ளை செய்யவும், இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.5.50 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.548/2022/இ1)

**பொருள் எண்.46**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.24470/2019/எம்ஏ2 நாள்:18.10.2025 இல் அரசாணை (நிலை) எண்:324 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்:17.10.2025 இன்படி நகர்புர உள்ளாட்சி அமைப்புகள் நகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சிறப்புக் கூட்டங்கள் நடத்துதல் கூட்டபொருள் அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி 27.10.2025 மற்றும் 28.10.2025 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள வார்டு சிறப்பு கூட்டம் நடத்துவதற்கு தேவையான நோட்டுகள், பிளக்ஸ்பேனர், ஸ்டேசனரி பொருட்கள் வாங்கவும், பொதுமக்கள் அறியும் வண்ணம் செய்திகளில் விளம்பரம்

செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-ஐ பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2315/2022/எப்1)

இடம் : சத்தியமங்கலம்
தேதி : 25.10.2025

**நகர்மன்ற தலைவர்**
**சத்தியமங்கலம் நகராட்சி**